REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✡ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: தை 3உ புதன் (16—1—57) ★ ★ வெளியூர்: தை 4உ வியாழன் (17—1—57) [இதழ் 188

## ஆந்திராவிற்கு டில்லி தரும் கடன்

### உரம் பெறுவதற்காக ரூ. 3 கோடி

1957—58-ம் ஆண்டில் உரம் வாங்கிக்கொள்வதற்கென குறுகியகாலக் கடனாக ஆந்திரப் பிரதேச விவசாயிகளுக்குத் தருவதற்காக டெல்லி சர்க்கார், ஆந்திர சர்க்காருக்கு ரூ. 3 கோடியே 10 இலட்சம் வழங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தத் தகவலை ஆந்திர மந்திரி பி. திம்மா ரெட்டி அறிவித்திருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

# சிங்கள இன, மொழி வெறியை எதிர்த்து

# அறப்போரில் ஈடுபட 5 இலட்சம் தொண்டர்கள்

## இலங்கையில் தமிழர்கள் உரிமைகோரி எழுகின்றனர்!

## பண்டாரநாயகா அதிகாரிகள் மாநாடு கூட்டி ஆலோசிக்கிறாராம்!

இலங்கையில் பண்டா சர்க்காருடையவும் அதன் ஆதரவாளர்களுடையவும் சிங்கள இன, மொழி வெறிப்போக்கை எதிர்த்து அறப்போரில் ஈடுபடுவதற்காக, 5 இலட்சம் தமிழ்த் தொண்டர்கள் அணிவகுக்கப்படுகின்றனர் என்று தெரியவருகிறது.

ஏற்கனவே, சர்க்காரின் தனிச் சிங்களச் சட்டம் அமுலாவதற்கு எதிராக அறப்போரில் ஈடுபட சுமார் ஒரு இலட்சம் தொண்டர்கள் தயாராகிவிட்டனர் என்றும், எஞ்சியோர் பட்டியல் தயாராகி வருவதாகவும் தமிழரசுக் கட்சி மக்கள் சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

### பண்டா மாநாடு கூட்டுகிறார்

தமிழர்கள் அறப்போருக்கு ஆயத்தம் செய்துகொண்டிருப்பதை ஒட்டி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பண்டாரநாயகா, தமது சர்க்காரின் உயர்தர அதிகாரிகள் அடங்கிய மாநாடு கூட்டி விவாதித்து வருகிறாராம்!

மோட்டார் வண்டிகளில் தமிழ் எழுத்துக்களைப் பொறித்துக்கொள்ள அனுமதிக்கவேண்டுமென்ற ஒரு யோசனையை, பண்டாவைத் தேர்ந்தெடுத்த மக்கள் சபை (சிங்கள) உறுப்பினர்கள் கடுமையாக எதிர்க்கின்றனராம்!

### மக்கள் வரிப் பணம்

பாழாவதைத் தவிர்க்க முடியாதாம்

ஹிராகுட், சன. 15—

ஹிராகுட் திட்டத்தில், மக்கள் வரிப் பணம் ஏராளமான அளவில் பாழடிக்கப்பட்டது பற்றி பண்டிதநேரு குறிப்பிடுகையில், 'இதுபோன்ற ஒரு பெரும் திட்டத்தில், ஓரளவு பணம் பாழாவதைத் தவிர்க்க முடியாதுதான்' என்று கூறி, தனது இறுமாப்பினைக் காட்டிக்கொண்டாராம்!

ஆனாலும் அவர், 'பொதுப்பணத்தைக் கையாளும்போது மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்' என்றும் கூறினாராம்!

### பிரிட்டனிலிருந்தே வெளியேறுகிறார?

பிரதமர் பதவியிலிருந்தும், மக்கள் சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகிய ஈடன், வெளிக்கிழமையன்று பிரிட்டனை விட்டு நியூசிலாந்து நாட்டிற்குச் செல்கிறார்.

### டில்லிப் பேரரசின் முடிவுக்கு எதிர்ப்பு

'பள்ளிகளில் மதக் கல்வி போதிக்கப்படக்கூடாது'

ஆந்திர மந்திரி கூறுகிறார்

ஐதராபாத், சன 15—

"கல்வி நிறுவனங்களில் மதக் கல்வி போதிக்கப்பட்டால் வகுப்புத் துவேஷம் ஏற்படுவதற்கு வழி ஏற்பட்டுவிடும்" என்று, ஆந்திர அமைச்சர் எம். நரசிங்க ராவ் கூறியுள்ளார்.

உஸ்மானியா பல்கலைக் கழகத்தை டில்லிப் பேரரசு ஏற்கும் யோசனையையும் அவர் எதிர்த்தார்.

## சினாய் தீபகற்பத்திலிருந்து வெளியேற இஸ்ரேல் முடிவு

ஆனாலும் காசாவிலிருந்து வெளியேற மாட்டார்களாம்!

ஜெருசலம், ஜன. 14—

சினாய் தீபகற்பத்திலிருந்து துருப்புகளைத் திரும்பப்பெறுவதற்கு இஸ்ரேல் சர்க்கார் ஒப்புதல் அளித்துவிட்டதாகத் தெரியவருகிறது.

எகிப்திய எல்லைக்குள்ளிருந்து இஸ்ரேல் எல்லைக்கு வந்துவிடுமாறு இராணுவத்திற்கு சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறதாம்.

ஆங்கிலோ—பிரெஞ்சு ஆக்கிரமிப்பிற்கு முதற்படியாக சினாய் எல்லைக்குள் இஸ்ரேல் துருப்புகள் கடந்த அக்டோபர் திங்களில் நுழைந்தது நினைவிலிருக்கலாம்.

ஆனாலும், காசா எல்லையிலிருந்து தாங்கள் வெளியேறப் போவதில்லை என்றும் இஸ்ரேல் அடம் பிடிப்பதுதான் வேடிக்கையாயிருக்கிறது.

## சுமத்ரா விடுதலை எழுச்சி

### சுகர்ணோவின் புதிய சிந்தனை?

### மக்கள் சபைக்குப் பதிலாக புரட்சிக் கவுன்சில்

மூன்று சுமத்திரா மாநிலங்களில் எழுந்த—மத்திய சர்க்காரிலிருந்து பிரிந்து சென்று சுதந்திர நாடு அமைக்கவேண்டும் என்ற விடுதலை எழுச்சி, இந்தோனேஷிய தேசியத் தலைவர்களிடை புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்திருப்பதாகத் தெரிகிறது.

இப்போது குடியரசுத் தலைவராயிருப்பவர், விடுதலைப் போராட்ட வீரரான டாக்டர் சுகர்ணோ ஆவார்.

புரட்சிக் கவுன்சில்

அவர், இப்போதிருக்கும் மக்கள் சபைக்குப் பதிலாகத் தனது தலைமையில் ஒரு புரட்சிக் கவுன்சில் அமைப்பது பற்றித் தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறாராம்!

இந்தத் தகவலை, தேசிய பத்திரிகையான 'மெர்டேகா' என்ற இதழ் தெரிவித்திருக்கிறது.

இப்போதுள்ள சர்க்கார் தொடர்ந்து நீடிக்கலாம் என்றும், ஆனால் அது, மக்கள் சபைக்குப் பதிலாகப் புதிதாக நிறுவப்படும் புரட்சிக் கவுன்சிலுக்கு பொறுப்பாயிருக்கவேண்டுமென்றும் சுகர்ணோ கருதுவதாக அந்த இதழ் தெரிவித்திருக்கிறது.

இராஜிநாமா

இதற்கிடையில், கூட்டு மந்திரி சபையில் உள்ள மற்றுமொரு மந்திரி இராஜிநாமாச் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. இஸ்லாமிய 'பெர்தி' கட்சியின் பிரதிநிதியாம் அந்த மந்திரி.

# 35,000 ஹங்கேரியர்கள் கொல்லப்பட்டனராம்!

## எண்ணற்றோர் வெளியேறினாலும் விடுதலை இயக்கம் பட்டுப்போகாது

## தொழிலாளி - விவசாயி - மாணவர் அனைவரும் புரட்சியிலீடுபட்டிருக்கின்றனர்

அகதிகள் தரும் தகவல்

பம்பாய், சன. 15—

ஹங்கேரி எழுச்சியின்போது சுமார் 20,000 ஹங்கேரியர்கள் புதாபெஸ்ட் நகரில் மட்டும் கொல்லப்பட்டனராம்!

ஹங்கேரி முழுவதுமாக மொத்தம் சுமார் 35,000 பேர் கொல்லப்பட்டிருக்கக்கூடுமாம்!

இந்தத் தகவலை, ஹங்கேரியிலிருந்து அகதிகளாக ஓடிவந்துள்ள எழுபத்தெட்டுப் பேர்களில் ஒருவர் இங்கு கூறியிருக்கிறாராம்.

ஹன் யாதி இம்ரி என்ற 38 வயதான வழக்கறிஞர் ஒருவர், தான், கடந்த இரண்டாம் உலக யுத்தம் முடிந்ததிலிருந்து தேசிய உணர்வு பட்டுப்போகாமல் காப்பாற்றி வருபவர்களில் ஒருவர் என்று கூறிக்கொண்டார் என்று தெரிகிறது.

"ஏராளமான ஹங்கேரியர்கள் வெளியேறிவிட்டபோதிலும், ஒவ்வொரு தொழிலாளியும் விவசாயியும் மாணவரும் அறிவு படைத்தோரும் புரட்சிக்காரர்களாயிருப்பதால், ஹங்கேரி தேசிய விடுதலை இயக்கம் பட்டுப்போய்விடாது" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

20 பெண்கள் உட்பட 78 ஹங்கேரியர்கள் அகதிகளாக நியூசிலாந்துக்குச் சென்று கொண்டிருக்கின்றனர் என்றும், செல்லும் வழியிலேயே அவர்கள், பம்பாய் விமான நிலையத்தில் பத்திரிகையாளரிடம் பேசும்போது மேற்கண்டவாறு கூறியுள்ளனர் என்றும் தெரிகிறது.

## அபேட்சகர் தேர்வு முறை காங்கிரசை சீர்குலைக்கிறது

### பம்பாயிலும் 'அதிருப்தி வியாதி' பரவுகிறது

இரு எம்.எல்.ஏ.-க்கள் உட்பட எண்ணற்ற ஊழியர் காங்கிரசுக்கு 'தலைமுழுக்கு' போடுகின்றனர்

ராஜ்கோட், சன. 15—

காங்கிரஸ் அபேட்சகர் தேர்வு, பம்பாய் மாநிலத்தில் காங்கிரசாரிடை மேலும் பிளவையும் அதிருப்தியையும் ஊட்டியிருப்பதாகத் தெரியவருகிறது.

பரவிவரும் இந்த 'வியாதி' பம்பாயையும் இப்போது பிடித்துக்கொண்டிருக்கிறது.

வெளியேற்றம்

இரு சட்டசபை உறுப்பினர்கள் உட்பட எண்ணற்ற காங்கிரஸ் ஊழியர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அபேட்சகர்களுக்காகத் தாங்கள் வேலை செய்வதற்கில்லை என்று கூறி வெளியேறியிருக்கின்றனர் என்றும், தங்களது இராஜிநாமாவைப் பிரதேசக் காங்கிரசுக்கும், தேபருக்கும் அனுப்பியுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

போட்டியிடுவர்

இப்படி வெளியேறிய சிலர், காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்து வரப்போகும் தேர்தலில் போட்டியிடுவர் என்றும் கூறப்படுகிறது.

## நாசரின் மற்றுமொரு தீவிர நடவடிக்கை

### பிரிட்டிஷ், பிரெஞ்சு பாங்கிகள் தேசீய மயமாகின்றன

கெய்ரோ, சன. 15—

எகிப்திய நாட்டில் உள்ள பிரிட்டிஷ், பிரெஞ்சு பாங்கிகளை எகிப்திய சர்க்கார் தேச உடைமையாக்கியிருக்கிறது.

இந்தத் தகவல் இன்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### சப்பான் உதவியுடன் பர்மாவில் பஞ்சு ஆலைகள்

இரங்கூன், சன. 15—

பர்மாவில், சப்பான் அரசாங்கத்தின் கூட்டு முயற்சியுடன் நான்கு பஞ்சாலைகள் ஆரம்பிக்கப்படவுடுமெனத் தெரியவருகிறது.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 16—1—'57 புதன்

# பண்டா திருந்துவாரா ?

சிங்கள இன, மொழி வெறிக்கு ஆளாகிவிட்ட பண்டார நாயகா, இலங்கைவாழ் தமிழர்தம், 'தமிழும் ஆட்சி மொழியாக—அரசு மொழியாக வேண்டும்' என்ற நியாயமான கோரிக்கையை ஏற்க மறுத்து, அனைத்தையும் சிங்கள மயமாக்கும் போக்கினைக் கைக்கொண்டதின் விளைவாக இலங்கையின் அரசியலில் கொந்தளிப்புத் தோன்றியிருக்கிறது, மீண்டும்.

இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்கினரான தமிழர்கள், அலட்சியப்படுத்தி விடக்கூடிய சிறுபான்மையினர் அல்லர் என்பதையும், அவர்கள், தங்கள் தாய் மொழியும் அரசு மொழியாகப் பெருமை பெற்றுத் திகழ வேண்டுமென்று விரும்புவது இயற்கையே என்றும், அவர்களது கோரிக்கை எத்தனை நியாயமானது என்பதை வலியுறுத்தியும், தனிச் சிங்கள மசோதாவிற்கு எதிராக இலங்கைத் தமிழர்கள் போராட்டம் நடத்தியபோது நாம் இங்கு எழுதியிருந்தோம்.

தமிழ்ப் பெருமக்களின் நியாயமான அந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்து, இலங்கை சர்க்கார் சிங்கள இன, மொழி வெறி கொண்டவர்களாகி, அனைத்தையும் சிங்களமயமாக்கும் தங்களின் அநியாயப் போக்கினால், இலங்கைத் தமிழர்தம் இதயங்களைப் புண்படுத்தவும் உரிமைகளை மறுக்கவுமான கண்டிக்கத்தகு செயல்களில் ஈடுபட்டு வருவதாக அவ்வப்போது செய்திகள் கிடைத்தவண்ணமுள்ளன.

அண்மையில், மோட்டார் வண்டிகளைப் பதிவு செய்யும் போது, வண்டிகளின் பதிவு எண்ணுக்கு முன்பாக, 'ஸ்ரீ' என்று சிங்களத்தில் எழுதுவது என்று பண்டா சர்க்கார் ஒரு நடைமுறையைக் கைக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் செயல் நடைமுறை பண்டா சர்க்காரின் சிங்கள இன, மொழி வெறிக்குத் தெளிவான எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதை எளிதில் உணர்ந்து கொண்ட இலங்கைத் தமிழர்கள், சர்க்காரின் இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்த கிளம்பியிருக்கிறார்கள். எந்தவித முன்னறிவிப்பும் திட்டமும தூண்டுதலும இன்றி தமிழரில் சிலர் தாங்களாகவே, ஒருநாள் சிங்கள எழுத்துடன் பதிவு எண் பொறித்த மோட்டார் வண்டி ஒன்றைக் கண்டதும், அதன் முன் படுத்து மறியல் செய்திருக்கின்றனர்.

இப்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்பவர்கள் வைத்திருக்கும் மோட்டார் வண்டிகளில் சிங்கள—ஆங்கில எழுத்துக்கள் இடம் பெற்றிருந்தால் அவற்றை நீக்கிவிட்டு, அவற்றிற்கு நேரான தமிழ் எழுத்துக்களைப் பொறிப்பது என்று தமிழர்களது பெரும்பான்மைப் பிரதிநிதித்துவம வாய்ந்த தமிழரசுக் கட்சி, மற்றும் அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளும் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. வரும் 19-ந் தேதியன்று போராட்டம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் வரும் பிப்ரவரி 4-ந் தேதியை துக்க நாளாகக் கொண்டாடுமாறு தமிழர்களுக்கு அந்த இரு கட்சிகளும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.

இது தவிர, கடந்த ஆகஸ்டு திங்களில் திரிகோணமலையில் நடைபெற்றத் தமிழரசுக் கட்சி மாநாட்டில், 'தமிழர்தம் நியாயமான கோரிக்கைகளுக்குப் பண்டா சர்க்கார் ஓராண்டுக்குள் இணங்கவில்லையானால் தமிழர்கள், சிங்களவரின் ஆதிக்கத்தின்கீழ் அடிமைகளாகவாழ விரும்ப மாட்டார்கள் என்ற காரணத்தினால், சுதந்திரத் தமிழ் நாடு அமைப்பதற்காக விடுதலைப் போராட்டம் நடத்துவோம்' என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றித் தமிழர்தம் உள்ளத்தைத் திறந்துகாட்டியிருக்கிறார்கள்.

இந்த எச்சரிக்கைகள் பண்டா சர்க்காருக்கு வழிகாட்டத் தவறுமேயானால், உண்மையிலேயே விளைவுகள் எப்படிப்பட்டனவாயிருக்கும் என்பதை நாம் எழுதிக் காட்டத் தேவையில்லை. அவை பண்டா சர்க்காருக்குத் தெளிவாகத் தெரிந்தவையாகத்தான் இருக்கவேண்டும். அபாயகரமான விளைவுகளை உள்ளடக்கியவைதான் என்றாலும், தமிழ் மக்கள், தங்களின் நியாயமான உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ள இதுபோல எச்சரிக்கை தந்து, செயலில் இறங்கி, சுதந்திரத் தமிழகத்திற்காகப் போராடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்று கூறுவதை, சுலபத்தில் எவரும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

பண்டா சர்க்கார், தங்களை ஆட்கொண்டுள்ள சிங்கள இன, மொழி வெறியின் விளைவாகத் தமிழர்கள் விடுத்துள்ள எச்சரிக்கையை அலட்சியப் படுத்துவார்களேயானால், அது வினையை விலை கொடுத்து வாங்கிய கதையாகத்தான் இருக்கும். இலங்கையில் தமிழரும் சிங்களவரும் சோதரர்களாக வாழ வழிசெய்ய வேண்டிய பொறுப்பில் உளளவர்கள் என்ற நிலையில் பண்டா சர்க்கார் தங்களின் சிங்கள இன, மொழி வெறியின் பிடிவாதப் போக்கால் இரு சாராரிடையேயும் பகையை வளர்க்க முற்படுவது விவேகமானதல்ல.

## இந்திய எஞ்சினீயர்கள் தயாரிக்கும் விமானம்

### விண்ணிலும், நீரிலும் வேகமாகச் செல்லக்கூடியதாம்

தண்ணீர் மீதும், வானத்திலும் வேகமாகச் செல்லக்கூடிய ஒரு விமானத்தை இந்தியா தயாரிக்கப் போகிறதாம்; இவ்வகை விமானமொன்று பறக்கவிடப்பட்டு பரிசீலிக்கப்பட்டதாம்.

இந்திய மின்பொறியாளர்களால் பெரும்பாலும் இந்தியாவில் கிடைக்கும் கருவிகளைக் கொண்டே இந்த விமானம் தயாரிக்கப்பட்டதாம்.

# 'பொருளாதாரத் துறையில் ரஷ்யக் கொள்கையைப் பின்பற்ற இயலாது'

## 'போலந்து நிலைமை வேறு வகையானது'

### கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் குழுவின் முதன்மைச் செயலாளர் விளாசல்!

வார்சா, சன. 15—

"பொருளாதாரத் துறையைப் பொறுத்தவரையில் போலந்து, ரஷ்யாவையோ அல்லது யூகோஸ்லேவியாவையோ தனக்கு எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் ஏற்றுக் கொள்ளாது; அவைகளுடைய கொள்கைகளைப் பின்பற்றாது" என்று, கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் குழுவின் முதன்மைச் செயலாளர் விளாடி ஸ்லாவ் கோமுல்கா இங்கு கூறியிருக்கிறார்.

"சோவியத்திலும், யூகோஸ்லாவியாவிலும் இருக்கும் நிலைமைகளினின்றும் போலந்தின் நிலைமைகள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. எனவே, நமது நாட்டு நிலைக்கு ஒத்த வகையில், நாட்டின் பொருளாதாரத் துறையைப் பொறுத்தவரையில் வேறு வகையான ஒரு பரிகாரம் கண்டாக வேண்டும்" என்று இங்கு நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இப்போதைய போலந்தின் முக்கியமான பிரச்சினைகளெல்லாம், அந்நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையும், பொருளாதாரப் பிரச்சினையுமே ஆகும் என்றும் அவர் தெரிவித்தாராம்.

## மாணவர்கள் உரிமை

### அங்கேரி சர்க்காரால் பறிக்கப்படும் வெட்கக்கேடு

புடாபெஸ்ட், சன 12—

அங்கேரியில் இன்று மாணவர் மாநாடு கூடவிருந்தது; ஆனால், அங்குள்ள ஏழு பல்கலைக் கழக மாணவர் தலைவர்களையும் போலீசார் கைது செய்தனர்.

சோவியத் அரசாங்கத்தின் 'கைப்பொம்மை'யான காதர் அரசாங்கத்தைக் கண்டித்து இந்த மாணவர் சம்மேளனம் முன்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

மாணவர்களை வசப்படுத்தி போட்டி சங்கம் நிறுவ அரசாங்கம் முனைந்துள்ளதாம்.

## தென்னாட்டு மாணவர் ஒழுக்கசீலம்

### கர்நாடக பல்கலைக் கழகத் துணைவேந்தர் புகழ் மாலை

பெல்லாரி, சன. 14—

'வடநாட்டு மாணவர்களைவிட தென்னாட்டு மாணவர்கள், கட்டுப்பாடும் ஒழுங்கும் மிக்கவர்களாகக் காணப்படுகிறார்கள்" என்று கர்நாடக பல்கலைக் கழகத் துணை வேந்தரான டி. சி. பாவதே என்பார் கூறியிருக்கிறார்.

அவர் கூட்டம் ஒன்றில் பேசுகையில், அறிவைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்ற தாகம் மாணவர்களுக்கு ஏற்படும் வகையிலும், பெருகிவரும் அறிவு நாட்டுக்கு நன்கு பயன்படும் வகையிலும் கல்வி முறை, பிரம்மாண்டமான தோர் மாற்றத்திற்கு உள்ளாக வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

## ஆங்கில அறிவை வலியுறுத்த !

### அரசியல் அமைப்பு விதி திருத்தப்படக்கூடும் ?

இந்தியாவிலுள்ள மாணவர்கள், ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி பெற்றவர்களாக விளங்க வேண்டுமென்பதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுவது அவசியமானால், பல்கலைக் கழக மானியக் குழுவால் நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழு அதற்குச் சிபாரிசு செய்யும்.

இந்தியாவின் கல்வி அமைப்பு முறையில் ஆங்கிலத்திற்கு உரிய இடம் என்ன என்பதை ஆராய இக்குழு நியமிக்கப்பட்டது.

## எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை!

### அசாமில் நிறுவ நிபுணர்கள் சிபாரிசு செய்கின்றனர்?

அரசியல், பொருளாதார அடிப்படையில் ஆராய்ந்த பின்னர், மத்திய அரசாங்கம் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை அசாம் மாநிலத்தில் உள்ள நூனமதி(?) யில் ஏற்படுத்தும் என்று தெரியவருகிறது.

இந்தத் தொழிற்சாலையை கல்கத்தாவிலோ, வடக்கு பீகாரிலோ ஏற்படுத்த வேண்டும் என்ற யோசனை இருந்துவந்தது.

எலிக்குக் குழாய்களின் மூலம் எண்ணெயைப் பல நூறு மைல்களுக்கு அப்பால் கொண்டு செல்வது அதிகப் பொருட்செலவை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.

கல்கத்தாவில் ஏற்படுத்துவதானால் ரூ. 68·65 கோடியும், பீகாரில் ஏற்படுத்துவதானால் ரூ. 68·67 கோடியும், அசாமில் ஏற்படுத்துவதானால் ரூ 50·94 கோடியும் செலவாகும் என்று நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

## காங்கிரஸ்மாநாட்டிற்கு அரசாங்கச் செலவு ?

### மேல் சபையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

### ஒத்திவைப்பு தீர்மானங்களை தலைவர் நிராகரித்தார்

போபால், சன. 15—

மத்தியப் பிரதேச மேல்சபையில் ஹீராலால் சர்மா, எல் என். குப்தா என்ற இரு உறுப்பினர்கள் கொண்டுவந்த இரு ஒத்திவைப்புத் தீர்மானங்களை தலைவர் நிராகரித்தார்.

இந்தூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்காக அரசாங்க ஊழியர்களும் நிதியும் பயன்படுத்தப்பட்டதாக அந்த இரு தீர்மானங்கள் கூறின.

'இந்தத் தீர்மானங்களில் கூறப்பட்டவை உடனடியான முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல' என்று சபைத் தலைவர் கூறினார்.

எதிர்பாராத செலவுகளுக்காக ரூ. 2 கோடி நிதியை ஏற்படுத்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக ஒரு மசோதா கொண்டுவரப்பட்டது; இம்மசோதாவுக்குக் கடும் எதிர்ப்பு இருந்தது.

கட்சிப் பிரச்சாரத்திற்கும், வரும் பொதுத் தேர்தலுக்கான கட்சி நடவடிக்கைகளுக்கும் பொது மக்கள் பணம் வீணாக்கப்படுவதாகவும், மாகாணத்திலுள்ள கொள்ளைக்காரர்களை ஒழிப்பதில் வெற்றி பெறவில்லை என்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர்.

நாள் முழுவதும் நடந்த விவாதத்திற்குப் பதிலளிக்கையில் நிதி அமைச்சர் கூறியதாவது:—

"இரண்டு கோடி ரூபாய் அவசர நிதியிலிருந்து இதுவரை செலவழிக்கப்பட்ட 33 இலட்சம் ரூபாயில் 23 இலட்சம் ரூபாய் கொள்ளைக்காரர்களை ஒழிக்கச் செலவிடப்பட்டது."

பொதுத் தேர்தல்

# நியமன பத்திரங்கள் தாக்கல் செய்ய ஜனவரி 29-கடைசி தேதி

## பிப். 4-ந் தேதிக்குள் திரும்பப் பெற வேண்டும்

புதுடில்லி, சன. 14—

சென்னை மாநில சட்டசபை, மக்கள்சபை தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை சனவரி 29-ந் தேதிக்குள் தாக்கல் செய்துவிட வேண்டுமென்று தேர்தல் குழு, நாள் குறிப்பிட்டிருக்கிறது.

பிப் 1-ந் தேதியன்று நியமனப் பத்திரங்கள் பரிசீலனை செய்யப்படும். மனுச் செய்துகொண்டோர் திரும்பப் பெறுவதற்கு பிப்ரவரி 4-ந் தேதி கடைசி நாளெனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவைகள் முடிவுற்றதும், பல்வேறு தொகுதிகளில் யார் யார் போட்டியிடுகின்றனர்; எந்தெந்தத் தேதியில் தேர்தல் நடைபெறும் என்பது தெளிவாகும்; இதற்கான அறிக்கையை சன. 19-ந் தேதி அன்று தேர்தல் குழு அறிவிக்கும்.

தேர்தல் முடிவுகள் மார்ச் 31-ந் தேதிக்குள் வெளியாகிவிடும்.

நாசிக்கில் உள்ள இரகசிய அச்சகத்தில் அச்சிடப்பட்ட 56 கோடி வாக்காளர் சீட்டுகள் எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. வாக்குப் பதிவுச் சீட்டுகளின் அமைப்பு முறை இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளதாம்.

## தேர்தல் அதிகாரிகள் பொறுப்பு

### சுகுமார் சென் விளக்கம்

ஜெய்ப்பூர், சன. 14—

"பொதுத் தேர்தலில் அதிகாரிகள் பாரபட்சமின்றி, நேர்மையாக மட்டும் நடந்துகொண்டால் போதாது; எவருக்கும் எந்த நேரத்திலும் சந்தேகம் ஏற்படாத முறையில் பணியாற்றவேண்டும்" என்று தேர்தல் குழு அதிகாரி சுகுமார் சென் தெரிவித்துள்ளார்.

"சென்ற தேர்தல், இந்தியாவில் முதல் தடவை நடைபெற்றது; எனவே, சில சமயங்களில் கண்டிப்பாக இருக்க முடியவில்லை; விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது. இந்த முறை, மக்கள் அனுபவம் பெற்றிருப்பதால் எதிலும் கண்டிப்பான முறை நிச்சயமாக இருக்கும்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## பி. சோ. - கம்யூனிஸ்டு பேச்சு வார்த்தைகள் முறிவு

### கேரளத்தில் எதிர்ப்புக் கூட்டணி இயங்காது ?

எர்ணாகுளம், சன. 12—

மும்முனைப் போட்டியைத் தவிர்த்து, காங்கிரஸ் வெற்றியைக் குறைக்கும் நோக்குடன் கேரள மக்கள் சோஷலிஸ்டு கட்சிக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிக்குமிடையே நடைபெற்றப் பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டனவாம்.

மக்கள் சோஷலிஸ்டுக் கட்சியினர் அதிக இடங்கள் கோருகின்றனர் என்றும், அக்கட்சிக்கு அவ்வளவு செல்வாக்கு இல்லை என்றும் கூறி, கம்யூனிஸ்டுக் கட்சி எதிர்ப்புக் கூட்டணி அமைவதைக் கலைத்துவிட்டது.

## 500 எகிப்தியர் படுகொலை

கெய்ரோ, சன. 14—

தென்சினாயில் நாகல் கிராமத்தில் 500 சடலங்களைக் கண்டு பிடித்திருப்பதாக ஐ. நா. அவசரகாலப் படையினர் அறிவித்துள்ளனராம்.

# பட்டிமார்ப்பு நெசவாளர்களுக்கு சர்க்கார் கைவிரிப்பு?

## உற்பத்தியான துணி விற்பனையை சர்க்கார் ஏற்று நடத்தாதாம்!

சென்னை, ஜன 15—

கடந்த 12-ந் தேதியன்று பகல் 12 மணிக்கு, சென்னை இராஜாஜி மண்டபத்தில், பட்டிமார்ப்பு நெசவாளர் ஆதக் குழு ஒன்று மாநில தொழில் இலாகா செயலாளர் இரங்கநாதன் அவர்களைச் சந்தித்து, பட்டிமார்ப்பு நெசவாளர்களின் குறைகளைத் தீர்க்குமாறு முறையிட்டுக் கொண்டுள்ளது.

நெசவாளர்களின் குறைகளை உடனடியாகச் சர்க்கார் தீர்த்து வைக்க வேண்டுமென்றும், உற்பத்தி செய்யப்படுகின்ற பட்டிமார்ப்புத் துணிகளைச் சர்க்காரே நேரடியாக விற்பனை செய்ய வேண்டுமென்றும் அத்தூதுக்குழு கேட்டுக்கொண்டது.

கோரிக்கைக்கு இணங்க மறுத்த அவ்வதிகாரி இப்போது சர்க்காரே அவற்றை விற்பனை செய்யமுடியாதென்றும் நெசவாளர்களின் குறைகளை வேண்டுமானால் உடனடியாகத் தீர்க்க ஆவன செய்வதாகவும் கூறியிருக்கிறார்.

செங்கற்பட்டு மாவட்டக் காங்கிரஸ் தலைவர் திரு பாலசுந்தரம், தி. மு. கழகத் தோழர் ம. தி தாயமணி, ஆனைபுத்தூர் நெசவாளர் சங்கத் தோழர் பாலையா, கம்யூனிஸ்டு உறுப்பினர் கே. எஸ். பாரத்தசாரதி, மற்றும் பலர் அக்குழுவில் இடம் பெற்றிருந்தனர். (ந. தி.)

### நிலங்களை வசப்படுத்த அரசாங்கத்தின் முடிவு?

சென்னை, சன 10—

பழுப்பு நிலக்கரி பரிசிலனைக்காக தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கடலூர் தாலுகா இளவரசம்பட்டு கிராமத்தில் 36 60 ஏகர் நிலத்தை எடுத்துக்கொள்ள சென்னை அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதாம்.

மேலும், விருத்தாசலம் தாலுகா அம்மைகொண்டான் கிராமத்தில் 61 03 ஏகர் நிலத்தையும் இளவரசம்பட்டு கிராமத்தில் 53.85 ஏகர் நிலத்தையும் வசப்படுத்திக்கொள்ளவும் சென்னை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம்.

## மாவட்டக் கழக நிர்வாகங்கள்

### தமிழிலேயே நடைபெற வேண்டுமென உத்தரவு

சிவகாசி, சன. 15—

இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தின்கீழ் உள்ள எல்லா அதிகாரிகளும், ஆசிரியர்களும், ஊழியர்களும் மாவட்டக் கழகம் சம்பந்தப்பட்ட கடிதப் போக்குவரத்தைத் தை மாதம் 1-ந் தேதிமுதல் தமிழிலேயே நடத்துவார்களெனத் தெரிகிறது.

இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இராமநாதபுரம் மாவட்டக் கழகத் தலைவர் உத்தரவுகள் அனுப்பியுள்ளாராம்.

## ‘திருக்குறள் வாரம்’

மதுரை—

தமிழ்ப் புத்தாண்டுத் துவக்க நாளான தைத்திங்கள் முதல் நாள் முதல் ஏழாவது நாள் வரையுள்ள ஒரு வார காலத்தைத் திருக்குறள் வாரமாகக் கொண்டாட, மதுரை திருவள்ளுவர் கழகத்தார் பொது மக்களை வேண்டிக் கொண்டு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

## அண்ணா அவர்களுக்கு

### ஊராண்மைக் கழக வரவேற்பு

அரவக்குறிச்சி, ஜன. 15—

இங்கு, இத்திங்கள் 20-ந் தேதியன்று வருகை தர இருக்கும் அண்ணா அவர்களுக்கு, ஊராண்மைக் கழகச் சாரபில் வரவேற்பு அளிப்பதென, கடந்த 8-ந் தேதியன்று நடைபெற்ற ஊராண்மைக் கழக உறுப்பினர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (ந - தி)

## சேதி தெரியுமா?

‘கிருஸ்திகா’ என்னும் ஒருவகைப் பழத்தை உட்கொண்டால் குறைந்தது இரண்டு மாத காலத்திற்கு உணவே தேவை இல்லையாம்!

அல்மோரா மாவட்டத்தில் இந்தப் பழம் தரும் மரங்கள் உள்ளனவாம்.

ஒரு மரத்தில் ஒரே சமயத்தில் சுமார் 5 மணங்கு எடையுள்ள பழங்கள் கிடைக்குமாம்.

# குடியாத்தம் தீப்பெட்டி தொழிலாளர் உள்ளிருப்புப் போராட்டம்

## தொழிலாளர்கள் நீக்கப்பட்டதற்கு எதிர்ப்பு

குடியாத்தம், சன. 15—

இங்குள்ள ஈசுவரன் தீப்பெட்டித் தொழிற்சாலை அதிபரால் அத்தொழிற்சாலையில் வேலை செய்யும் 67 தொழிலாளர்களில் 47 பேர்களை கடந்த மாதம் 30-ந் தேதி முதல் வேலையிலிருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து எஞ்சியுள்ள 20 பேரும் அன்று முதல், தொழிற்சாலைக்குள்ளாகவே உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர்.

கடந்த மாதம் 27-ந் தேதி தொழில் அதிகாரி, அத்தொழிற்சாலை அதிபர் ஆள்குறைப்பு செய்தது சம்பந்தமாகத் தந்த நோட்டீசு குறித்து விசாரித்தபோது, சீனியர் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்க முதலாளிகள் மேற்கொண்டுள்ள திட்டம் விளக்கப்பட்டது. சட்டவிரோதமாகச் சீனியர் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கக்கூடாதென அவ்வதிகாரி தொழிற்சாலை அதிபருக்குக் கூறினபோதிலும், அவ்வாலை அதிபர் 40 பேரை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்.

நீக்கப்பட்ட தொழிலாளர்கள் கடந்த 2 வார காலமாகத் தங்கள் வீடுகளுக்குச் செல்லாமல், பட்டினிகிடந்து தொழிற்சாலைக்குள்ளேயே அமைதியான முறையில் போராட்டம் செய்துவருகின்றனர்.

இவ்விவரங்களைச் சுட்டிக்காட்டி தொழிலாளர் சார்பில் தொழில் அதிகாரிக்கும் கமிஷனருக்கும் மனுக்கள் போடப்பட்டிருக்கிறது.

குடியாத்தத்தில் உள்ள தொழில் உதவி இன்ஸ்பெக்டர், தொழிற்சாலை தஸ்தாவேஜுகளைப் பரிசிலனைசெய்து, வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களில் பலர் சீனியர் தொழிலாளர்கள் என்று தொழில் அதிகாரிக்கு ‘ரிப்போர்ட்’ செய்திருக்கிறார்.

இந்த நிலையில், நீக்கப்பட்ட தொழிலாளர்களைத் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ளக் கேட்டால், தொழிற்சாலையையே மூடிவிடப்போவதாகவும் அவ்வாலை அதிபர் கூறுகிறாராம்! (ந. தி.)

### தமிழ் டைப் இயந்திரம்

#### ஒருவகைப்படுத்த முயற்சி

சென்னை, சன. 15—

தமிழ் டைப் இயந்திரங்கள் எல்லாவற்றிலும் எழுத்துக்களின் அமைப்பு வரிசை ஒரேமாதிரியாக இருக்கவேண்டும் என்று விற்பனையாளர்களுக்கு அரசாங்கம் குறித்துள்ளதாக அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

### தமிழ்—நிர்வாக மொழி

#### ஆராய்ந்தறிய குழு நியமனம்

சென்னை, சன. 15—

சென்னை மாநிலத்தில், தமிழை எந்தெந்தப் பகுதியில், எவ்வெப்போது நிர்வாக மொழியாக்கலாம் என்று ஆராய்ந்தறிந்து கூற சென்னை அரசாங்கம் குழு ஒன்றை அமைத்துள்ளதாக நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

## ஐசனேவரின் மத்தியக் கிழக்குத் திட்டம்

### குருஷ்சேவின் கண்டனம்

#### இஸ்ரேலுக்கு எகிப்து தரும் எச்சரிக்கை

கெய்ரோ, சன. 15—

இஸ்ரேல், காசா பிரதேசத்திலிருந்து வெளியேறுவதில் காட்டிவரும் தாமதம், ஐ. நா. அவசர காலப் படையின் எதிர்காலம் குறித்த புதியதொரு பிரச்சினையைக் கிளப்பியுள்ளதாகத் தெரிகிறது.

சூயஸ் கால்வாயை சீக்கிரமே சுத்தம்செய்ய உறுதி தந்துள்ள அதே நேரத்தில் எகிப்து, காசா பகுதியிலிருந்து இஸ்ரேல் உடனடியாக வாபசாகாவிட்டால் ஐ நா. படை உடனே எகிப்திலிருந்து வெளியேறவேண்டும் என்றும், அப்போது தாங்களே இஸ்ரேல் இராணுவத்தை வெளியேற்றிக் கொள்வதாயும் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

“பிரிட்டிஷ் சிங்கம் இப்போது தளர்ந்து பலமிழந்திருக்கிறது; மேலும் அண்மையில், எகிப்தில் அது வாலிழந்துவிட்டது”

என்று ரஷ்யக் கம்யூனிஸ்டு செயலாளர் குருச்சேவ் கூட்டம் ஒன்றில் பேசும்போது கூறியிருப்பதாகத் தெரிகிறது.

“அந்தச் சிங்கமிருந்த இடத்திற்கு—பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியங்கள் இருந்த இடத்திற்கு இப்போது அமெரிக்க ஏகாதிபத்தியம் விரைந்துகொண்டிருக்கிறது”

என்றும் குறிப்பிட்ட குருஷ்சேவ், தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

‘நாம் மகத்தான சரித்திரச் சம்பவங்களைக் கண்ணுற்றுக் கொண்டிருக்கிறோம்; ரஷ்யாவில் கம்யூனிஸ்டு ஆட்சிக் காலத்தில் ஐசனேவர் திட்டம்போன்ற பல—ரஷ்யாவுக்கு எதிராகத் தயாரிக்கப்பட்ட திட்டங்களை நாம் கண்டிருக்கிறோம்.

“சர்ச்சில் திட்டம் இருந்தது; ட்ரூமன் திட்டம் என்று ஒன்றிருந்தது; இவைபோன்ற பல ஆருடங்களையும் ரஷ்ய மக்கள் கண்டுதான் வருகின்றனர்; ஆனால், இந்தத் திட்டங்களும் ஆருடங்களும் பொய்த்துப் போனதையும் நாம் கண்டிருக்கிறோம்; அதே கதிதான் இந்த ஐசனேவர் திட்டத்திற்கும் ஏற்படும்.

“எகிப்துமீது பிரிட்டிஷ்—பிரெஞ்சு—இஸ்ரேல் தாக்குதலை அமெரிக்காவும் சிறிது கண்டித்தது உண்மைதான்; ஆனால் கண்டித்ததற்குக் காரணம், அமெரிக்க ஆளும் வர்க்கம் அராபிய நாடுகளின் சுதந்தரத்தைப் பலப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தினால் அல்ல என்பதையும், பிரிட்டிஷ் சிங்கம் தளர்ந்துபோனதினால் அது இருந்த இடத்தைத் தான் பிடிப்பதற்காகத்தான் என்பதையும் ஐசனேவரின் திட்டமே கூறுகிறது.”

### ஆசிரியருக்குக் கடிதம் :

#### இன்னல்களை அகற்ற ஆட்சியினர் முன்வருவரா?

ஐயா,

பேராவூரணிக்கு மூன்று மைல் கிழக்கேயுள்ள வீரியங்கோட்டை ஊராட்சி மன்றத்திற்குட்பட்ட வீரியங்கோட்டை, முடச்சிக்காடு, கழனிக்கோட்டை ஆகிய மூன்று ஊர்களிலுமுள்ள சுமார் 700 ஏகர் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த சம்பா நெற்பயிர், செழிப்புடன் வளர்ந்து கதிராகி வெளிவந்த சமயத்தில், குருத்துப் பூச்சியாலும் கொண்டைப் பூச்சியாலும் சுமார் 70 சத விகிதம் பாதிக்கப்பட்டுவிட்டது.

பயிரின் வளத்தைப் பார்த்து மகிழ்ந்திருந்த விவசாயப் பெருங்குடி மக்கள் பதரைக் கண்டதும் வேதனை மேலிட்டால் பதறிப்போய், வருங்கால வாழ்வு வறண்ட பாலைவனமாய் இருப்பதை எண்ணி வருந்திக் கண்ணீர் வடிக்கிறார்கள். பொதுவாக அவர்கள் வாழ்வதற்கே வழியின்றிப் போய்விட்டது.

எனவே உடனடியாக அது சம்மந்தப்பட்ட விவசாய அதிகாரிகள், பாதிக்கப்பட்ட இப்பகுதிகளைப் பார்வையிட்டு இங்குள்ள மக்களுக்கு வந்துள்ள இன்னலைத் தீர்த்துவைக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

ஆர். சிங்காரம்,
முடச்சிக்காடு.

★

#### செயலற்றஅரசியலார் முன்வருவரா?

ஐயா,

எங்கள் ஊரான ஏனாதி, பட்டுக்கோட்டை வட்டாரத்திலிருக்கின்றது. இதன் மொத்தப் பரப்பளவு 1,468 ஏகர்களாகும். இதில் நெல் விளையும் கழனி சுமார் 800 ஏக்கர்களாகும். இந்த எண்ணூறு ஏக்கரில் இவ்வாண்டு சுமார் 500 ஏகர் கழனிகளில் விளைந்த நெல், பூச்சியால் பாதிக்கப்பட்டுவிட்டது. சுமார் 18,000 கலம் நெல் விளைகின்ற இக்கழனிகளில் இவ்வாண்டின் விளைவு 6,000 கலத்திற்கு இருக்காது.

நெல் விளைவின் அடிப்படையிலேயே வாழ்க்கை நடத்துகின்ற இவ்வூர் மக்களின் நிலை மிக பாதிக்கப்படும். இங்கு வாழும் சுமார் 2,000 மக்களும் மனமொடிந்து ஆற்றொணுத் துயர்க்கடலில் ஆழ்ந்துள்ளனர். ஊர்மக்கள் சார்பாகத் தமிழ் மாநில முதலமைச்சருக்கும், வேளாண்மை அமைச்சருக்கும் தஞ்சை மாவட்டத் தண்டலருக்கும் நிலைமையை விளக்கி மனு அனுப்பப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்டு அவதியுறும் பட்டுக்கோட்டை வட்டார மக்களுக்கு நிவாரணமளிக்க நாடாளும் நாயகர்கள் கவனம் செலுத்துவார்களா?

அடிக்கடி புயலால் பாதிக்கப்பட்டு வாழ்வதற்கு வழிகாணாது தடிக்கின்ற மக்களுக்கு இடிமேல் இடிபோல் இன்னல் தொடருகின்ற நிலைமையை மாற்றி அவர்தம் வாழ்க்கையை உயர்த்தத் திட்டம் தீட்டி அரசியலார் செயல்புரிய முன்வருவார்களா?

பன்னீர் செல்வம் நூலகத்தார்,
ஏனாதி.

### அரசாங்க அச்சகத் தொழிலாளர்கள்

#### சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம்

ஷில்லாங், ஜன. 12—

அசாம் அரசாங்க அச்சகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின் காரணமாகப்புதன்கிழமை தோறும் வெளிவரும் அரசாங்க கெசட் வெளிவரவில்லை. சம்பள உயர்வு கோரியே தொடர்ந்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனராம்.



******************-**-*********************

# தி. மு. க. வில்லை (பாட்ஜ்)

★

தி. மு. கழகக் கொடி வட்ட வடிவில் (மேற்பாதி கருப்பு—கீழ்ப்பாதி சிவப்பு) பொறிக்கப்பட்டு, அந்த வட்டத்தைச் சுற்றி அமைந்துள்ள வெள்ளை வளையத்தில் மேலே தி மு க' என்ற எழுத்துக்களும் கீழே ‘வருக! வெற்றி தருக!’ என்ற சொற்றொடரும் எழுதப்பட்டு, சட்டையில் குத்திக்கொள்வதற்கு ஏற்றவகையில் வில்லை (பாட்ஜ்) தலைமை நிலையத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வில்லை சாதாரண நாட்களிலும், தேர்தல் காலத்திலும், கழகத் தோழர்களும், தேர்தல் பணியில் ஈடுபடும் தொண்டர்களும் அணிவதற்கு ஏற்றதாகும்.

## வில்லையின் விலை அணு 6.

விற்பனைக் கழிவு என்று கிடையாது. வெளியூர்க்கிளைகள்: 25 வில்லைகளுக்குக் குறையாமல் எத்தனை வில்லைகள் வேண்டுமோ, அவ்வளவுக்குரிய தொகையை முன்கூட்டியே தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைத்தால், தலைமை நிலையச் செலவில் அவை அனுப்பிவைக்கப்பெறும்.

‘அறிவகம்’ சென்னை
24—12—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

*************************************



தேர்தல் பிரச்சாரப் பாடல்கள் :

## ஆளை ஏய்க்கப் பாக்குறார்; ஆமாஞ் சாமி போடுறார்!

★

[ஆளை ஆளைப் பார்க்குறார்—என்ற மெட்டு]

ஆளை ஏய்க்கப் பாக்குறார்
ஆளை ஏய்க்கப் பாக்குறார்
ஆள வந்தார்க ளின்று
ஆளை ஏய்க்கப் பாக்குறார்
மூளைக்கி வேலெ யில்லே
முன்னேற்றங் காணவில்லெ
வேளைக்கி கட்சி மாறும்
ஆளுக்குக் கொறச்சலில்லெ
நாளொரு திட்டம் போட்டும்
நமக் கொண்ணும் லாபமில்லெ
நாடாளும் மந்திரிங்க
நல்லதேதும் செய்யாமலே (ஆ)

பாட்டாளி மக்களுக்கே
கூட்டாளி என்றார் தம்பி
போட்டார்கள் ஓட்டும்
மாட்டுப் பொட்டியில் [சொல்லை நம்பி
நாட்டிலே பஞ்சம் வந்து
வாட்டுதே என்றால் அய்யோ
மோட்டாரில் ஏறிக் கொண்டு
நீட்டுறார் நேரே கம்பி (ஆ)

பகுத்தறிவாளர்களைப்
பழிக்குறார் ஏதோ சொல்லி
பச்சோந்திப் பிள்ளைகளும்
படிக்கிற காங்கிரஸ் பள்ளி
வகுத்திடும் திட்டங்களைப்
போடுறார் தள்ளித் தள்ளி
வாய்ப்பந்தல் வீரர் மேனி
வாடாத பணப் புள்ளி (ஆ)

நாடாள வந்து விட்டு
நாட்டியம் பாத்துக்கிட்டு
ஊட்டி கொடைக் கானலில்
உல்லாசம் தேடிக் கிட்டு
ஓட்டுக்கு மட்டும் நம்ம
ஊடு தேடி வந்துக்கிட்டு
ஆட்டி வைக்கும் டில்லிக்கு
ஆமாஞ் சாமி போட்டுக்கிட்டு [ஆ]

—நா. மா. முத்துக்கூத்தன்

# கோவாவை விட்டு வெளியேறமாட்டார்களாம்!

## போர்ச்சுகல் அமைச்சரின் திமிரான பேச்சு

லிஸ்பன், சன. 15—

போர்ச்சுக்கல் சர்க்கார், கோவாவிலிருந்து ஒரு அங்குலம் கூட நகரமாட்டார்களாம்!

இந்தியாவில் தங்களுக்குள்ள ஆதிக்கத்தை விட்டுக்கொடுக்க அவர்கள் சம்மதிக்கவே மாட்டார்களாம்!

கோவாவில் தனக்குள்ள பொறுப்புகளைத் தொடர்ந்து அவர்கள் நிறைவேற்றுவார்களாம்!

இப்படிப் பேசியிருக்கிறார் போர்ச்சுகல் தற்காப்பு மந்திரி ஒருவர்!

# இராகுட் அணைத் திட்டத்தால் 1,84,598 ஏகர் நிலம் நீரில் மூழ்கும்?

## 249 கிராமக் குடும்பத்தினரைக் குடியமைக்க ரூ. 17 இலட்சம் செலவு?

### இடம் பெயர்ந்த விவசாயிகள் புனர்வாழ்வுக்கு வடநாட்டு மாநிலத்தின் தீவிர முயற்சி

இராகுட் அணைத் திட்டம் நிறைவேற்றப்படுவதன் காரணமாக 1,84,593 ஏக்கர் நிலம் தண்ணீரில் மூழ்கிவிடும்; அதில் 70,000 ஏக்கர் நிலம் சாகுபடிப் பிரதேசமாகும். மொத்தத்தில் ஒரிசாவில் 249 கிராமங்கள் தண்ணீரில் மூழ்கிவிடும்; இதனால், 16,500 குடும்பங்கள் பாதிக்கப்படும்.

ஒரு குடும்பத்துக்குச் சராசரி ஐந்துபேர் வீதம் வைத்துக்கொண்டால், அப்பிரதேசத்தின் மொத்த மக்கள் தொகை 82,500 ஆகிறது.

இந்தியாவில் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகிற எந்த ஒரு நதிப் பள்ளத்தாக்குத் திட்ட விஷயத்திலும் இவ்வளவு பெருவாரியான அளவுக்கு மக்களை அப்புறப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக ஒரிசா சர்க்கார் இராகுட் நில நிறுவனமொன்றை அமைத்து திட்டத்துக்கான நிலங்களை 'ஆர்ஜிதம்' செய்வது, புனர்குடியமைப்பு இடங்களுக்கான நிலங்களைச் சீர்திருத்தி, அப்புறப்படுத்தப்படும் மக்களைப் புனர்குடியமர்த்துவது ஆகிய பொறுப்புகளை அந்த நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

அந்த நிறுவனம் இதுவரையில் சுமார் 10,000 ஏக்கர் நிலத்தைச் சீர்திருத்தியிருக்கிறதாம்.

அந்த நிறுவனம், மீட்கப்பட்ட நிலங்களில் குடியமர்த்துவது—கால்வாய்ப் பாசன வசதியுள்ள தரம்பை நிலங்களில் குடியமர்த்துவது—நீர்த் தேக்கத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடியமர்த்துவது என்ற மூன்று முக்கிய திட்டங்களை வகுத்திருக்கிறது.

புனர்வாழ்விடுக் கொள்கையின்படி 'ஆர்ஜிதம்' செய்யப்படும் எல்லா சொத்துக்களுக்கும் முழு அளவு நஷ்டஈட்டுத் தொகை ரொக்கமாகக் கொடுக்கப்பட்டு, இலவசமாகப் புனர்குடியமைப்பு ஏற்பாடுகள் செய்யப்படுமாம்.

மேலும், சொந்தமாகப் புனர்வாழ்வு ஏற்பாடுகளைச் செய்து கொள்வது, அல்லது சர்க்கார் முழுப் பொறுப்பேற்றுள்ள இடங்களில் குடியேறுவது அவரவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்ததாம்.

இடம் பெயர்ந்தவர்களைக் குடியமர்த்துவதற்காக மொத்தம் 80,000 ஏகர் நிலம் தேவைப்படும் என்று முதலில் மதிப்பிடப்பட்டது. பின்னர், இதற்கென 10,221 ஏகர் நிலமே மீட்கப்பட்டது. இதில் 4,000 ஏகர் இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இதுவரையில் மொத்தம் 1,419 குடும்பங்கள் 33 கிராமங்களில் குடியமர்ந்துள்ளன.

மீட்கப்பட்டுள்ள நிலங்களில் இதுவரை 50 சதவிகித நிலங்களுக்குப் பாசன வசதிகள் ஏற்பட்டுள்ளன; இனி இது 60 சதவிகிதம் வரை அதிகரிக்கப்படுமென்றும் இவைகளுக்கான மராமத்துச் செலவில் 30 சதவிகிதம்வரை மாநில சர்க்கார் ஏற்றுக்கொள்வர் என்றும் தெரிகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக விவசாயிகளுக்கு இரசாயன உரங்களும், உரங்களும் இலவசமாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டும் தொடர்ந்து விநியோகம் செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம். சாகுபடி சம்பந்தமாய் அவர்களுக்கு ஆலோசனை கூற விவசாய அபிவிருத்தி அதிகாரியொருவரும் பணியாற்றி வருகிறார். அவர்களுக்கு விதை நெல் கடனாக வழங்கப்படுகிறது.

இந்தப் பிரதேசங்களில் பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், சமுதாய நிலையங்கள், மார்க்கெட்டுகள், சாலைகள் முதலியவைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

காலி செய்யப்படும் கிராமங்களுக்கு அதிகாரிகள் நேரில் சென்று அங்குள்ள மக்களின் குறைபாடுகளைத் தெரிந்துகொண்டு உடனடியாக நிவாரண நடவடிக்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்கின்றனராம்.

கடந்த 1955 ஏப்ரல் 4-ந் தேதி துவங்கி இடையிடையே நடைபெற்ற மக்களை அப்புறப்படுத்தும் வேலை மொத்தம் 105 முழு கிராமங்களிலும், 35 கிராமங்களின் பகுதிகளிலும் நடைபெற்றிருக்கிறது. இக்கிராமங்களிலுள்ள குடும்பங்கள் தொகை 14,350 என்றும், இவ்வேலைகளுக்காகச் செலவிடப்பட்டதொகை ரூ. 17,39,000 என்றும், இந்த ஆண்டிலும் சுமார் 2,838 குடும்பங்கள் கொண்ட 7 முழு கிராமங்களிலும், 27 கிராமப் பகுதிகளிலும் இவ்வேலை நடைபெறும் என்றும் தெரிகிறது.

********-**********

## சென்னை - பெரம்பூர்

### தொகுதி கிளைக் கழகங்களுக்கு:

★

சென்னை-பெரம்பூர் தொகுதியைச் சேர்ந்த 6, 17, 18, 19, 20, 21, 23, 24-வது வட்டத் தி. மு. கிளைக் கழகச் செயலாளர்களையும், செயற்குழு உறுப்பினர்களையும், நிர்வாகிகளையும் தி. மு. கழக அபேட்சகர் தேர்வுக் குழுவின் தலைவர் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சந்திக்க விரும்புகிறார்கள்.

17-1-57 வியாழன் மாலை 6-மணிக்கு சென்னை-பெரம்பூர் லட்சுமி சனிமாக கொட்டகைக்கு அருகில் உள்ள திரு. வி. க. மன்ற அலுவலகத்தில் தவறாது சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தி. மு. க. தலைமை நிலையம்

*******-***********

# தென்னாட்டு மாநில சர்க்கார் ஊழியர் நிலை படுமோசம்

## சம்பள உயர்வு தரும் திட்டம் டில்லியிடம் சமர்ப்பணம்

புதுடில்லி, சன. 15—

இந்தியத் துணைக்கண்டத்திலேயே தென்னாட்டு மாநிலங்களான சென்னை, மைசூர், கேரளம், ஆந்திரம் ஆகியவற்றில் தான் மாநில சர்க்கார் ஊழியர்களின் சம்பளம் மிக மிகக் குறைவு என்று கூறப்படுகிறது.

வேறு வட நாட்டு மாநிலங்களின் சர்க்கார் ஊழியர் சம்பளங்கள், இந்த நான்கு மாநிலங்களைச் சேர்ந்தவர்களைவிட அதிகமானதாக இருக்கிறது என்றும் தெரியவருகிறது.

இப்போது இந்தத் தென்னாட்டு மாநிலங்கள் நான்கும், தங்கள் ஊழியர்களின் சம்பள விகிதங்களை அதிகரிப்பதற்கென திட்டம் தயாரித்து உதவிகோரி டில்லிக்கு அனுப்பி வைத்துள்ளனவாம்!

டில்லி திட்டங்களைப் பரிசீலித்துக்கொண்டிருப்பதாகவும், டில்லி உதவுவது நிச்சயம் என்றும் கூறப்படுகிறது.

### நிலக்கடலை ஏற்றுமதிக்குத் தடை விதிப்பு

#### அனுமதிச் சீட்டுப் பெறாமல் ஏற்றுமதி செய்ய முடியாது

சென்னை வர்த்தகப் பயிர் மார்க்கெட் சட்டத்திற்கு வடஆர்க்காடு மாவட்டம் உட்பட்டுள்ளது; எனவே, வடஆர்க்காடு மார்க்கெட் கமிட்டியிடமிருந்து அனுமதிச் சீட்டுப் பெறாமல் நிலக்கடலைகளையோ, பருப்பையோ இங்கிருந்து ஏற்றுமதி செய்ய முடியாது தடைவிதிக்கப்பட்டுள்ளது.

### கண்ணிழந்தோருக்கு இசையறிவு தரப்படும்?

புதுடில்லி, சன. 15—

அடுத்த ஆண்டு முதல், குருடர்களுக்கு இசையில் பயிற்சியளிக்க இந்தியக் கல்வி இலாகா ஐந்தாண்டுத் திட்டமொன்றை மேற்கொள்ளுவதென முடிவு செய்திருக்கிறதாம்.

ஐந்தாண்டுப் பயிற்சியை முடித்தவர்களுக்கு சர்க்கார் ஆதரவு பெற்ற இசைக் கழகங்கள் நடத்தும் இசைத் தேர்வுகளில் அவர்கள் கலந்துகொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படுமாம்.

### இரயில் நிலையங்களில் சிற்றுண்டி விடுதிகள்

#### மாதர் நிறுவனங்கள் நடத்த அனுமதிக்கப்படும்?

புதுடில்லி, சன. 15—

சில குறிப்பிட்ட இரயில் நிலையங்களிலுள்ள சிற்றுண்டி நிலையங்களை நடத்தும் காண்டிராக்டுகள், மாதர் நிறுவனங்களுக்குத் தரப்படவேண்டும் என்ற யோசனையை இரயில்வே போர்டு ஏற்றிருப்பதாகவும், அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

### இரயில்வே இலாகாவின் நிர்வாக இலட்சணம்?

சாரியா, சன 15—

இங்கிருந்து உள்ள இரயில் மூழ்செட்டியன் (டட்ஸ் வாகன்கள்) ஒரு நாளில் 4 அல்லது $4\frac{1}{2}$ மணி நேரமே ஓடுகிறதாம்! மீதமுள்ள 20 மணி நேரமும் ஏற்றுமதி இறக்குமதி வேலைகளில் வீணாகிறதாம்!

இந்த நிலையைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

### 23,750 டன் இயற்கை இரப்பர் உற்பத்தி

புதுடில்லி, சன. 16—

1956-ம் ஆண்டில் மொத்தம் 23,750 டன் இயற்கை இரப்பர் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

## துணை அமைச்சர் இராஜிநாமா

### காரணம் ஏதும் கூறப்படவில்லை!

பம்பாய், சன. 15—

பம்பாய் சிறை இலாகா உதவி மந்திரியாயிருந்த பி. டி. தேஷ்முக் என்பார், தமது மந்திரி பதவியை இராஜிநாமாச் செய்துவிட்டதாகத் தெரிகிறது.

அவர், தனது சட்டசபை உறுப்பினர் பதவியைக்கூட நேற்று இராஜிநாமாச் செய்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இவற்றிற்கான காரணம் எதுவும் கூறப்படவில்லை.

அவர் வரப்போகும் பொதுத் தேர்தலில் ஈடுபடப் போவதுமில்லை என்றும் கூறப்படுகிறது.

1945 முதல் 1950 வரை பி. ஜி. கேர் மந்திரி சபையில் பார்லிமெண்டரி செயலாளராகவும், மொரார்ஜி தேசாய் மந்திரி சபையில் உதவி மந்திரியாகவும் தொடர்ந்து பதவி வகித்து வருபவர்; சென்ற நவம்பரில், இருமொழி பம்பாய் மாநிலம் அமைந்தபோது ஒய். பி. சாவன் மந்திரி சபையிலும் உதவி மந்திரியாக இடம் பெற்றிருந்தார்.

## நெசவாளர்களுக்குப் புனர்வாழ்வு?

### இரு திட்டங்களுக்கு அனுமதி

புதுடில்லி, சன. 15—

நெசவாளர் புனர்வாழ்வுக்கும், நூற்பிலும் நெசவிலும் மக்களுக்குப் பயிற்சியளிக்கவுமான இரு புதிய திட்டங்களுக்கு இந்தியப் பேரரசு அனுமதியளித்துள்ளதாம்.

முதல் திட்டத்திற்கு ரூ 50,000-மும், இரண்டாவது திட்டத்திற்கு ரூ 1,62,000-மும் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

### விஞ்ஞான சக்திகள் பற்றிய ஆராய்ச்சி

#### பண்டிதரின் வேண்டுகோள்

கல்கத்தா, சன. 14—

'வேகத்துடன் தொடர்பின்றி ஆராய்ச்சி நிலையங்களில் உட்கார்ந்துகொண்டு வெறும் சக்திகளைக் கண்டுபிடித்து வெளியிடுவதுமட்டிலும் போதாது; விஞ்ஞான ஆராய்ச்சிகள் நாசவேலைகளுக்குப் பயன்படாமல் மக்கள் நலனுக்காகப் பயன்படும்படி செய்வதே முக்கியமான கடமையாகும்" என்று பண்டித நேரு உலக விஞ்ஞானிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

### ஆந்திராவிற்கு டில்லி......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மேலும், முந்திரி பயிரிடுவதற்கென ஏகருக்கு ரூ. 150 வீதம் கடன் தரவும் டில்லி சம்மதித்திருப்பதாக அந்த மந்திரி தெரிவித்திருக்கிறார்.

மேலும், மாநில சர்க்காரே சுமார் 15 ஏகர் நிலத்தில் முந்திரி பயிரிடுவதென முடிவு செய்திருப்பதாயும், இதற்குக் காரணம், முந்திரி டாலர் சம்பாதித்துத் தரும் பொருள் என்பதே என்றும் அந்த மந்திரி தெரிவித்திருக்கிறார்.

## கழகக் கூட்டம்

★

பழனி:

தேரடி திடலில்

18—1—57 மாலை 5 மணிக்கு

பேசுபவர்: அண்ணா

(கூட்டத்தில் தி. மு. க. தேர்தல் நிதி அளிக்கப்படும்)

## பொங்கல் நாள் விழா

★

கடலூர்:

18—1—57 அன்று கடலூர் மஞ்சை நகர் மைதானத்தில் தோழர் இரா. சாம்பசிவம் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் மு. கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., இரே. இளம்வழுதி ஆகியோர் பேசுவர். 13—1—57-லிருந்து 18—1—57 வரை நடைபெறும் பலவித விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு தோழர் கருணாநிதி அவர்கள் பரிசுகள் வழங்குவார். கூட்டத்தில் தி. மு. கழகத் தேர்தல் நிதியும் அளிக்கப்படும்.

தியாகதுருகம்:

18—1—57 மாலை 6-மணிக்கு, கிளைக் கழகச் சார்பில் பொங்கல் விழாவும், தி. மு. கழகத் தேர்தல் நிதியளிப்பு விழாப் பொதுக்கூட்டமும் நடைபெறும். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், பி. இராமகிருட்டிணன், மு. இரகுராமன் ஆகியோர் பேசுவர்.

மதுரை:

18—1—57 மாலை 6-மணிக்கு, மதுரை வடக்கு மாசி வீதி சப்பாணி கோயில் சந்தில் தோழர் சி. கோவிந்தராசன் தலைமையில் நகரக் கிளை சார்பில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மன்னர்மன்னன் ஆகியோர் பேசுவர்.

கல்புதூர்:

வ. ஆ. மாவட்டம் காட்டுப்பாடியையடுத்த கல்புதூரில் தோழர் வ. ஆ. பதூல் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெறும். தோழர் சி. பி. சிற்றரசு பேசுவார். (தேதி குறிப்பிடப்படவில்லை.)

## அ. பொன்னம்பலனார்

### சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

ஜன. 17 : புதூர்-உத்தமனூர்
18 : உடுமலைப்பேட்டை
19 : கணியூர்
20 : மதுரை
21 : லால்குடி (திருச்சி)
22 : சேலம்
23 : போளூர்
24 : விழுப்புரம்
25 : தஞ்சாவூர்
26 : பூவாளூர்
27 : சுப்பிரமணியபுரம் (தஞ்சை மாவட்டம்)

## வழக்கறிஞர்கள் இல்லாத நீதிமன்றம்!

திருவனந்தபுரம், சன. 15—

"திருவனந்தபுரத்தில் நீதிமன்றத்தின் நிரந்தரக் கிளை ஒன்று ஏற்படுத்தும் கோரிக்கையில் முடிவு காணும்வரை வழக்கறிஞர்கள் எவரும் தம் தொழிலை மேற்கொள்ளக் கூடாது" என்று வழக்கறிஞர்கள் சங்கம் வேண்டிக்கொண்டதையொட்டி இன்று வழக்கறிஞர்கள் எவரும் நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை.

வழக்கறிஞர்கள் வராததால், வாய்தா கோரப்பட்ட வழக்குகளுக்கு அவ்வாறு அனுமதியளிக்கப்பட்டது; இருதரப்பினரும் வராதிருந்த வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.